முருகப்பெருமான் துணை

ஆற்றலாம் வேல்முருகன் அருளிய இந்நூலை
ஏற்றமே பெற்று உலகம் இன்புறுமே

– ஓங்காரக்குடிலாசான்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1361

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.06.2023, புதன்கிழமை

1. பேருலகைக் காக்க புண்ணிய பலம் கொண்டு
பிரணவ சக்திமிகு ஞானியராக
ஆறுமுகன் என் அவதாரமாக வந்த
அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 06 ம் நாள், 21.06.2023, புதன்கிழமை)
உலகத்தில் அரங்கனுக்கு சக்தி கூட எடுத்துரைப்பேன்
ஞானவான்களை உலகமெங்கும் படைக்க
ஞானிகள் பூஜைதனை இலகுவாய் துவக்கி
3. துவக்கியே எளிமைபட யாவர்க்கும் ஞானம் அருளுகின்ற
தேசிகனே ஆறுமுகன் என் மகாசூட்சும ராஜனே
ஆசிதந்து நீ தருகின்ற தீட்சை
ஆறுமுகன் யான் தருகின்ற தீட்சையாகும்
4. வாசிவெல்லும் யோகத்தை உன் தீட்சை
வரமாக மக்களுக்கு தரக்கூடும்
கூடாத தீவினைகள் அகன்றுமேவி
குலம் காக்கும் உன் குடையின் கீழ்வரும் மக்களுக்கு
5. மக்களுக்கு ஆற்றல் பெருக்கமோடு
மகத்துவம் பட ஞானத்தை அறிவுறுத்தி
தேக்கமின்றி அவர்கள் வினை போக்கி
தெய்வஞான வழிவந்து உன்னருளால்

6. அருளாலே அவர்களெல்லாம் ஞானிகளாக
ஆறுமுகன் என் ஆசியோடு கடைத்தேற்றம் பெறுவரப்பா
பெருமைமிக்க அரங்கன் உன் சேவையை
பூவுலகில் புண்ணிய பலம் பெருக்கி

7. வருங்காலம் ஞானியர்கள் கையில் நிற்க
வல்லமையான ஞானிகளே தலைமைகொண்டு
ஆறுமுகன் யான் ஆசிதர ஞான ஆட்சியாக
அற்புதம் நடக்கும் காலம் சடுதிசடுதி

8. சடுதியில் இந்த மாற்றம் அரங்கனும்
சக்தியாலும் சரவணச்சுடரின் ஒளியாலும் நடந்தேறும்
பெருமைபட ஆறுமுகன் உன்னுள் இருந்து
பிரபஞ்சத்தையே மீட்டு காப்பேன் நல்லாசிபட

ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—